# ACCOUNTING

தேர்ச்சி 05



PAST PAPER FROM 1993 TO 2019

# கணக்கீட்டு எண்ணக்கரு

## Accounting concept


By :-V. S. Kumaran B.Com (ACC) Spl .dip in Edu

J/vayavilan central college

# கணக்கீட்டு எண்ணக்கருக்கள்
# (ACCOUNTING CONCEPT)

**நிறுவனங்களில் இடம்பெறுகின்ற கொடுக்கல் வாங்கல்களுக்குரிய கணக்குப்பதிவுகளை மேற்கொள்ளும் போது பின்பற்றப்படுகின்ற எடுகோள்கள் , மரபுகள், விதிகள், கொள்கைகள் என்பன கணக்கீட்டு எண்ணக்கருக்கள் ஆகும். இவை கணக்கீட்டுக்குரிய வழிகாட்டிகளாகும்.**

**கணக்கீட்டு எண்ணக்கருக்களின் நன்மைகள்.**

1) பொதுத்தன்மையை ஏற்படுத்தக்கூடியதாகவுள்ளது.
2) ஒப்பீட்டுத் தன்மையை ஏற்படுத்தக்கூடியதாகவுள்ளது.
3) விளங்கக்கூடிய தன்மை அதிகரிக்கப்பட்டுள்ளது.
4) சிறப்பான முகாமைத்தீர்மானங்களை எடுக்கக்கூடியதாகவுள்ளது.
5) நிதிக்கூற்றுக்களுக்கான அங்கீகாரம் ஏற்பட்டு ஏற்றுக்கொள்ளக்கூடிய தன்மை ஏற்பட்டுள்ளது.

## 1) தொழில் முழுமைக்கூற்று/வியாபார அலகுசார்:உள்தாந்த தன்மை எண்ணக்கரு
## (THE BUSINESS ENTITY CONCEPT)

நிறுவனங்களுக்குரிய கணக்குப் பதிவகள் மேற்கொள்ளும் போது நிறுவனம் ஒரு தனி அலகாகவும், நிறவன உடமையாளர் வேறானவொரு தனி அலகாகவும் கருதியே கணக்குப் பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது இவ்வெண்ணக்கரு ஆகும்.

கம்பனி, கூட்டுஸ்தாபனங்கள் என்பன சட்ட ஆளுமையின் கீழ் வேறுபடுத்தப்பட்டபோதிலும் தனிவியாபாரம், பங்குடமை என்பன இவ்வெண்ணக்கருவுக்கு அமையவே வேறுபடுத்தப்பட்டு கணக்குப் பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**அமைவான உ~ம் 1) நிறுவன உடமையாளரினால் இடப்பட்ட மூலதனத்திற்கும், பற்றுக்கும் தனியாக பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன.**

**முரனான உ~ம் 2) நிறுவன உடமையாளர் தனது வதிவிடத்தை நிறுவனத்தின் ஐந்தொகையில் சொத்தாக காட்டியுள்ளார்.**

## 2) தொடர்ந்து செல்லும்/செயற்படு அமைப்பு எண்ணக்கரு
## (THE GOING CONCERN CONCEPT)

நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது அந்நிறுவனமானது குறுகியகாலத்தில் ஒடுக்கல் செய்யப்படும் என கருதாது அவை நீண்டகாலப்போக்கில் தொடர்ந்து இயங்கும் தன்மை வாய்ந்தது. என்ற அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படவேண்டும் என இவ் எண்ணக்கரு வலியுறுத்துகின்றது.

இவ் எண்ணக்கருவை பின்பற்றுவதால் நிறுவனத்திற்கு பின்வரும் அனுகூலங்கள் ஏற்படும்.

அ) முதலீட்டாளர்களின் ஒத்துழைப்பை பெறமுடியும்.
ஆ) ஊழியர்களின் ஒத்துழைப்பை பெறமுடியும்.
இ) வழங்குணர்களின் ஒத்துழைப்பை பெறமுடியும்.
ஈ) வாடிக்கையாளர்களை தக்கவைத்துக்கொள் முடியும்.

**அமைவான உ~ம் 1) சொத்துக்கள் நடைமுறைச்சொத்து நடைமுயல்லாச்சொத்து என்ற வகுதிக்குள் வகைபடுத்தப்பட்டுள்ளது.**

**முரனான உ~ம் 2) வெளிநாடு பயணமாகவுள்ள நபர் ஒருவர் தனது பயனஏற்பாடு பூர்த்தியாகும் வரை வியாபாரத்தை ஆரம்பித்து நடாத்தினார்.**

## 3) பண அளவீட்டு எண்ணக்கரு/அளவிட்ட அலகுக் கருதுகோள்/பணம் ஒரு பொதுவான கருவி
## (THE MONEY MEASUREMENT CONCEPT)

வியாபார நிறுவனங்களில் இடம்பெறுகின்ற சகல கொடுக்கல் வாங்கல்களுக்குரிய கணக்குப்பதிவுகள் யாவும் பணம் என்ற பொதுவான கருவியால் அளவிடப்பட்டு பணப்பெறுமதியிலேயே நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டுமென இவ் எண்ணக்கரு வலியுறுத்துகின்றது. மாறாக பணம் என்ற பொதுவான கருவியால் அளவிடப்பட முடியாத எந்தவொரு விடயமும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட முடியாது என இது கூறுகின்றது. காலத்துக்கு காலம் பொருளாதாரத்தில் ஏற்படுகின்ற பணவீக்க வீதம், பணச்சுருக்கம் போன்றவற்றால் ஏற்படுகின்ற மாற்றங்களை இது கவனத்தில்கொள்வதில்லை.

இவ் எண்ணக்கருவின் நிபந்தனைகள் வருமாறு.

அ) பணத்தின் பெறுமதி மாறாது.
ஆ) பணம் ஒரு பரிமாற்ற ஊடகமாக தொழிற்படும்.
இ) பணத்தினை பெறுமானத் திரட்டாக பயன்படுத்தலாம்.

**அமைவான உ~ம் 1) நிறுானத்திலுள்ள 500 அரிசி மூடைகள் ரூபா 250000 பெறுமதியில் இருப்பாக உள்ளடக்கப்பட்டுள்ளது.**

**முரனான உ~ம் 2) நிறுவனத்திலுள்ள 40 ஊழியர்கள் ஊழியர் படை என ஐந்தொகையில் சொத்தாக காட்டப்பட்டுள்ளது**

**4) அட்டுறு/சேர்வுறு எண்ணக்கரு**

**(ACCRUAL CONCEPT)**

நிறுவனத்தின் குறித்த நிதியாண்டுக்குரிய செலவினங்கள், வருமானங்கள் மாத்திரமே அந்நிதியாண்டின் நிதிக்கூற்றுகளில் காட்டப்படவேண்டும் என இது வலியுறுத்துகின்றது. அதாவது காசாக செலுத்தப்பட்ட செலவினத்துடன் செலுத்தப்படவேண்டிய சென்மதிகளும், பெற்ற வருமானத்துடன் பெறப்படவேண்டிய வருமதிகளும் உள்ளடக்கப்படவேண்டியதுடன், முற்பணங்களும் சீராக்கப்பட வேண்டும் என இது கூறுகின்றது.

**அமைவான உ~ம் 1) மாதாந்தம் ரூபா200 வாடகையில் பெறப்பட்ட கட்டிடத்திற்கு ஆண்டுகாலத்தில் ரூபா1800 மாத்திரம் செலுத்தப்பட்ட போதும் இலாபநட்டக் கணக்கில் ரூபா2400 என காட்டப்பட்டுள்ளது.**

**முரனான உ~ம் 2) ஆணடில் செலுத்தப்பட்ட ரூபா2500 மின்சாரம் மாத்திரம் இலாபநட்டக் கணக்கில் காட்டப்பட்டுள்ளது. எனினும் அட்டுறு ரூபா800ம் முற்பனம் ரூபா500ம் அதனுடன் சீராக்கப்படவில்லை.**

**5) கொள்கை மாறாமை/மாறாநிலை/பழமை பேனல்/இசைவுத் தன்மை எண்ணக்கரு**

**( CONSISTANCY CONCEPT)**

ஒரு நிறுவனத்தினால் கொடுகல், வாங்கல்களுக்குரிய கணக்குப் பதிவுகளின்போது ஆரம்பத்தில் பின்பற்றப்பட்ட கொள்கை, முறை, ஒழுங்குகள் எதுவோ அதனையே எதிர்வரும் காலங்களிலும் பின்பற்றப்பட வேண்டும் என இது வலியுறுத்துகின்றது. அதாவது அடிக்கடி எதுவித முன்னேற்றுமின்றி புதிய முறைகளை மாற்றக் கூடாது என்பதாகும். <u>எனினும் நீண்ட ஆராச்சியின் பின்னர் புதிய முறையினால் நிறுவனத்தின் நிதி நிலமையில் சிறப்பான முன்னேற்றம் ஏற்படும் என இனம் கானப்பட்டால் புதிய முறையை அறிமுகம் செய்யலாம்</u>.

**அமைவான உ~ம் 1) FIFO முறைக்குப் பதிலாக LIFO முறையை பின்பற்றியதால் இலாபம் ஈட்டியுள்ளது.**

**முரனான உ~ம் 2) இருப்பு மதிப்பீட்டிற்கு FIFO முறைக்கு பதிலாக LIFO முறையை பின்பற்றுகின்றது.**

**6) இணைத்தல் எண்ணக்கரு:.பொருத்தப்பாடுடைய:.ஒத்துப்பார்த்தல்**

**(MATCHING CONCEPT)**

ஒரு நிறுவனத்தின் நிதியாண்டுக்கான வியாபாரப்பெறுபேற்றினை கணிப்பிடும் போது அக்காலப்பகுதிக்கான செலவினங்களுடன் அக்காலப் பகுதிக்கான வருமானங்களை இணைத்தே கணிப்பிடப்பட வேண்டும் என்பது இவ் எண்ணக்கருவாகும். அதாவது நிதியாண்டின் வருமானங்களை அவ் வருமாணங்களை உழைப்பதற்கு ஏற்பட்ட செலவினங்களுடன் ஒப்பீடுசெய்யப்பட்டே இலபம் அல்லது நட்டம் கணிக்கப்படவேண்டும் என இது கருதுகின்றது. மாறாக தொடர்பற்ற செலவினங்களும், தொடர்பற்ற வருமானங்களும் இணைக்கப்படக் கூடாது என்பதாகும்.

**அமைவான உ~ம் 1) இவ்வாண்டில் நட்டம் ஏற்படுமென எதிர்பார்க்கப்பட்டபோதும் கடன்பட்டோரில் 10% ஐயக்கடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.**

**முரனான உ~ம் 2) நிதியாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 500000 பெறுமதியான மோட்டார் வாகனம் இவ்வாண்டு இலாபநட்டக் கணக்கில் செலவாக காட்டப்பட்டுள்ளது.**

**7) கைக்கிட்டிய /தேறிய / வருமான எண்ணக்கரு**

**(REALIZATION CONCEPT)**

குறிக்கப்பட்ட நிதியாண்டுக்குரிய வருமானங்கள் கிட்டும் அல்லது தேறும் எனக்கருதி அக் காலப்பகுதிக்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்றன. அதாவது பொருட்கள் அல்லது சேவைகள் பரிமாற்றம் நிகழ்ந்ததுமே அவை இலாபம் உழைக்கப்படுகின்றன என்பதை அடிப்படையாகக்கொண்டு கணக்குகள் பேனப்படுகின்றன. இதன்படி விற்கப்பட்ட பொருளுக்குரிய பணத்தை வாடிக்கையாளரிடம் அறவிடப்பட்ட பின்பு அல்லது பொருள் அகற்றப்பட்ட பின்பு கணக்குகளில் காட்டப்பட வேண்டும் என்ற அவசியமில்லை.

**அமைவான உ-ம் 1) கடன் விற்பனை ரூபா 8800 க்குரிய பணம் வசூழிக்கப்படாத போதும் அவை வியாபாரக் கணக்கில் விற்பனையாக காட்டப்பட்டுள்ளது.**

**முரனான உ-ம் 2) கடனுக்கு விற்கப்பட்ட ரூபா 12000 இல் 2/3 பகுதியான ரூபா 8000 மாத்திரம் வசூழிக்கப்பட்டு இவை மாத்திரம் நிறுவனத்திலிருந்து அகற்றப்பட்டன இத்தொகையே வியாபாரக் கணக்கில் விற்பனையாக காட்டப்பட்டுள்ளது.**

8)முன்னெச்சரிக்கை/பாதுகாப்பு/கூர்ந்தமதி/புத்திசாதுரிய/கவன/செயலறிவு/முன்மதி/விவேக எண்ணக்கரு

(PRUDENCE CONCEPT)

நிறுவனத்திற்கு எதிர்காலத்தில் செலவினங்கள் அல்லது நட்டங்கள் ஏற்படும் என முன்கூட்டியே கருதின் அவற்றிற்கான ஏற்பாடுகளை கணக்குகளில் உள்ளடக்க வேண்டும், மாறாக வருமானங்கள் உறுதியற்றவையாகவும் மதிப்பிட முடியாதவையாகவும் காணப்படும்போது அவற்றினை கணக்குகளில் உள்ளடக்க கூடாது. என்பது இவ்வெண்ணக்கருவாகும். அதாவது ''இலாபத்தை எதிர்பார்க்காதே எல்லா நட்டங்களுக்கும் ஏற்பாடு செய்'' என்பதாகும். மேலும் நிறுவனத்தை போலி நிலமையில் காட்டாது நல்ல நிலமையில் வைத்திருக்க வேண்டம். ஏன வலியுறுத்துகின்றது.

**அமைவான உ-ம் 1) இருப்பு கிரயம், தேறிய பெறுமதி எது குறைவோ அக் குறைந்த பெறுமதியில் நிதிக்கூற்றுக்களில் காட்டுதல்.**

**முரனான உ-ம் 2) நட்டம் ஏற்படும் என கருதுவதால் ஐயக்கடன் எற்பாடு செய்யாது புறக்கணிக்கப்பட்டுள்ளது.**

9)பொருண்மை/பொருள்சார்/கனிச/முக்கியமான அளவு

(MATERIALITY CONCEPT)

கணக்கீட்டு கொடுக்கல் வாங்கல்களுக்கு பதிவு செய்யும்போது அவை நிதிக்கூற்றில் ஏற்படுத்தும் செல்வாக்கின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் கணக்குப் பதிவுக்கு உட்படுத்த வேண்டும் என இவ் எண்ணக்கரு வலியுறுத்துகிகின்றது அதாவது நிறுவனத்தில் கொடுக்கல் வாங்கல்களுக்குரிய கணக்குப் பதிவுகள் மேற்கொள்ளும்போது நிறுவனத்தின் இயலளவு தன்மைக்கும், கொடுக்கல் வாங்கல்களின் தன்மை, அதன் அளவு, அதன் முக்கியத்துவம் என்பவை கவனத்தில் எடுக்கப்பட்டு கணக்குப் பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் இது நிறவனத்திற்கு நிறுவனம் வேறுபடலாம்.

**அமைவான உ-ம் 1) ரூபா 100,000 பெறுமதியைகொண்ட பொறி இயந்திரம் ஒன்றிற்கு பொருத்தப்பட்ட ரூபா 100 பெறுமதியுடைய ஆணிக்குரிய செலவு இ/ந கணக்கில் தாக்கல் செய்யப்பட்டது.**

**முரனான உ-ம் 2) ரூபா 5 பெறுமதியைக்கொண்ட கோவை 5 வருடங்களுக்கு செலவாக பதிவளிக்கப்பட்டுள்ளது.**

10) கால/ஆவர்த்தன எண்ணக்கரு

(PERIOD CONCEPT)

நிறுவனத்தின் ஆயுட்காலத்தை சீரான சிறு சிறு கால இடவெளிகளாகப் பிரித்து ஒவ்வொரு காலப் பகுதிக்குரிய பெறுபேற்றினையும் தனித்தனியே கணித்துக்கொள்ள வேண்டும் என இது வலியுறுத்துகின்றது. இதன்படி பொதுவாக ஒரு வருட காலத்தையும் (12 மாதத்தையும்) விஷேட தேவைக்காக குறைந்த காலத்தையும் கெண்டுள்ளது. இதன்பிரகாரமே நிறுவன தரவுகள் ஆண்டுகளாக வகுக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுகின்றன.

**அமைவான உ-ம் 1) கரன் நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்கள் 31/3/2007 நிறைவுசெய்யப்படுகின்றன.**

**முரனான உ-ம் 2) மதி நிறுவனம் 8 வருடங்களுக்குரிய நிதிக் கூற்றக்களை ஒன்றாக வெளியிட்டது.**

11) கிரய/வரலாற்றுக் கிரய எண்ணக்கரு

(HISTORICAL COST CONCEPT)

சொத்துக்கள் கணக்கேடுகளில் பதிவுசெய்யும் போது அவை கொள்வனவு செய்யப்பட்ட தினத்திலுள்ள கொள்விலைப் பெறுமதியிலேயே நிதிக் கூற்றுக்களில் காட்டப்படவேண்டும் என்பது இவ் எண்ணக்கருவாகும். விலைமட்டங்களில் ஏற்படுகின்ற மாற்றங்களும், சொத்தின் காலக்கழிவு, வழகிகிழப்பு என்பவற்றினால் ஏற்படுகின்ற பெறுமதிக் குறைவும் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

அமைவான உ-ம் 1) வரையறுத்த z கம்பனி தனது ஐந்தொகையில் நிலையான சொத்துக்களை கிரயம்,திரண்ணதேய்வு, தேறியது. என்ற வகுதியில் வகைப்படுத்தியது.

முரனான உ-ம் 2) காணியின் கிரயம் ரூபா 100000 வாக உள்ளபோதும் அவற்றின் சந்தைப்பெறுமதி ரூபா 120000 பெறுமதியில் நிதிக் கூற்றில் காட்டப்பட்டுள்ளது.

12) **வெளிப்படுத்தல்/தெரியப்படுத்தல்**

**(DISCLOSURE CONCEPT)**

நிதிக்கூற்றுக்களை பயன்படுத்தும் கட்சியினர் அதன் உண்மைத் தன்மையினை விளங்கிக்கொள்ளத்தக்க வகையில் அதில் போதியளவு தகவல்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பது இவ்வெண்ணக்கருவாகும். இதன்படி செயற்பாட்டுப் பெறுபேறுகள், விளைவகள் நிதிக்கூற்றுக்களில் போதியளவு வெளிப்படுத்தப்படும். இதனால் நிதிக்கூற்றுக்களின் விமர்சனத்தன்மை அதிகரிப்பதுடன் அதன் பெறுபேறும் செம்மையானதாகவிருக்கும்.

**அமைவான உ~ம் 1) மீளப்பெற்ற அறவிடமுடியாக் கடன் கடன்பட்டோன் கணக்கில் இருபக்கத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.**

**முரனான உ~ம் 2) நிலையான சொத்துக்களுக்கு பெறுமானத்தேய்வு கணிக்கப்பட்ட போது பெறுமானத்தேய்வு முறை, கொள்கை என்பன வெளிப்படுத்தவில்லை.**

13) **தோற்றத்திலும் கருத்து முக்கியம்/அமைப்பின் மேலான சாரம்/வடிவத்தை காட்டிலும் கணக்கீட்டு யதார்த்தம் எண்ணக்கரு**

(SUBSTANCE OVER FROM)

நிகழ்வுகளை அல்லது கொடுக்கல் வாங்கல்களை கணக்கீட்டுச் செய்முறைக்கு உட்படுத்துகையில் அல்லது நிதிக்கூற்றுக்களில் அறிமுகம் செய்கையில் சட்டரீதியான விடயங்ளை மட்டும் கவனத்தில் கொள்ளாது வடிவத்திற்கும் நிதிசார்ந்த யதார்த்தத்திற்கும் உட்பட்டதாக அமைதல் வேண்டும். ஏன இது வலியுறுத்துகின்றது.

**அமைவான உ~ம் 1) குத்தகை அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட பொறி நிதிக்கூற்றில் சொத்தாக பதியப்பட்டுள்ளது.**

**முரனான உ~ம் 2) விற்பனை செய்க அன்றேல் திருப்பி அனுப்புக என்ற அடிப்படையில் அனுப்பப்பட்ட ரூபா 15000 பெறுமதியான பொருட்களில் 2/3 பகுதி மாத்திரமே விற்கப்பட்டது. ஆனால் இவை முழுவதும் விற்பனையாக பதியப்பட்டுள்ளது.**

## பயிற்சி வினாக்கள்

**1)பின்வரும் நிகழ்வுகள் ஒவ்வொன்றிலும் மீறப்பட்ட கணக்கீட்டு எண்ணக்கருக்களை எடுத்துக்காட்டி அவற்றினை விளக்குக.**

**அ)** ஒரு தனி வியாபாரியான சேரன் தனது சொந்த வதிவிடத்தை நிறுவனத்தின் ஐந்தொகையில் சொத்தாக காட்டியுள்ளார்.

ஆ) நிதியாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 80000 பெறுமதியான மோட்டார் வாகனத்தை அவ்வாண்டு இலாபநட்டக் கணக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இ) வரையறுத்த W கம்பனி தனது ஊழியர்பபடையை ஐந்தொகையில் சொத்தாக காட்டியுள்ளது.

ஈ) வரையறுத்த Z கம்பனி தனது நிலையானசொத்துக்கு காலத்திற்கு காலம் வேறுபட்ட பெறுமானத்தேய்வு முறையை பின்பற்றுகின்றது.

உ) மாதாந்தம் ரூபா200 வாடகைக்கு பெறப்பட்ட கட்டிடத்திற்கு ஆண்டு காலத்தில் செலுத்தப்பட்ட ரூபா1800 மாத்திரம் இலாபநட்டடக் கணக்கில் தாக்கல் செய்யப்பட்டது.

ஊ) ரூபா 100000 பெறுமதியான பொறிக்கு பொருத்தப்பட்ட 200 பெறுமதியான ஆணி இலாபநட்டக் கணக்கில் வரவிடப்பட்டது.

எ) முடிவுத் தொக்கின் கிரயப் பெறுமதி குறைவாகவுள்ளபோதும் அதன் சந்தைப்பெறுமதியில் இருப்பு மதிப்பிடப்பட்டுள்ளது.

ஏ) ஆண்டு காலத்தில் விற்பனை செய்யப்பட்ட ரூபா12000 பெறுமதியான பொருட்களில் 2/3பகுதி மாத்திரமே நிறுவனத்தைவிட்டு அகற்றப்பட்டது இவை மாத்திரமே விற்பனையாக காட்டப்பட்டுள்ளது.

ஐ) 1980 ஆம் ஆண்டில் ரூபா 80000 க்கு கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனத்தை 2007 ஆம் ஆண்டு ஐந்தொகையில் 150000 ரூபா வாக காட்டப்பட்டுள்ளது.

ஒ) மீளப்பெற்ற அறவிடமுடியாக்கடன் கடன்பட்டோரில் எப்பதிவக்கும் உட்படுத்தப்படவில்லை.

2) நிரல் A யில் உள்ளதற்கு பொருத்தமான கூற்று நிரல் B யில் தரப்பட்டுள்ளது அதனை தெரிவு செய்து தரப்பட்ட கூட்டில் நிரப்புக.

| | A | | | B |
|---|---|---|---|---|
| 1 | பணஅளவீட்டு எண்ணக்கரு | ( ) | அ | நிறுவன உடமையாளரை நிறுவனத்திலிருந்து வேறாக கருதுதல் |
| 2 | வரலாற்றுக்கிரய எண்ணக்கரு | ( ) | ஆ | இலாபத்தை எதிர்பாராது நட்டங்களுக்கு ஏற்பாடுசெய்தல். |
| 3 | ஆவர்த்தன எண்ணக்கரு | ( ) | இ | விற்பனை இடம்பெற்றவுடனே அவை இலாபம் உழைக்கப்படுகின்றது. |
| 4 | அட்டுறு எண்ணக்கரு | ( ) | ஈ | நிதிசார்ந்த முக்கிய பெறுமதிகளை கவனத்திலெடுத்தல். |
| 5 | கொள்கைமாறாமை எண்ணக்கரு | ( ) | ஊ | பணத்தினால் அளவிடக்கூடிய விடயங்களை கணக்குப்பதிவுக்கு உட்படுத்துதல். |
| 6 | தேறிய எண்ணக்கரு | ( ) | ஊ | நிதியாண்டு வருமானங்களை செலவினங்களை ஒப்பீடு செய்தல் |
| 7 | அலகுசார் எண்ணக்கரு | ( ) | எ | நிலையான சொத்துக்களை அவற்றின் கிரயப்பெறுமதில் பதிவுக்கு உட்படுத்தல் |
| 8 | முன்னெச்சரிக்கை எண்ணக்கரு | ( ) | ஏ | செலுத்தப்பட்டதுடன் சென்மதிகளும் முற்பனங்களும் கவனத்திலெடுத்தல். |
| 9 | பொருண்மை எண்ணக்கரு | ( ) | ஐ | நிறுவனம் நீண்டகாலம் தொடந்து இயங்கும் தன்மை வாய்ந்தது. |
| 10 | இணைத்தல் எண்ணக்கரு | ( ) | ஒ | நிறுவனத்தின் பெறுபேற்றை சிறுகாலப்பகுதியாக பிரித்து கணிப்பிடல் |

**3) பின்வரும் கூற்றுக்கள் சரியா பிழையா என கூறுக பிழையாயின் சரியான நடைமுறையை எண்ணக்கருவுடன் தருக. ?**

1. கைக்கிட்டிய எண்ணக்கருவின் பிரகாரம் கடன்விற்பனை முழுவதும் வியாபாரக்கணக்கில் காட்டமுடியாது.
2. மாறாநிலமை எண்ணக்கருவுக்கமைய பற்றுக்களுக்கான பதிவு அவசியமில்லை.
3. பணஅளவீட்டு எண்ணக்கருவுக்கமைய முகாமைத்துஅறிவை ஐந்தொகையில் சொத்தக காட்ட முடியாது.
4. இருப்பின் வரலாற்றுக்கிரய பெறுமதியைவிட கைத்தேறத்தக்க பெறுமதி குறைவாக காணப்படின் பாதுகாப்பு எண்ணக்கருவின்படி குறைந்த பெறுமதியை நிதிக்கூற்றில் காட்டுதல் வேண்டும்
5. ரூபா 15 க்கு கொள்வனவு செய்யப்பட்ட பேனை ஒன்று மூன்று வருடங்கள் பயன்படுத்தப்பட்டதால் இவை மூன்று வருட கணக்கிலும் செலவாக காட்டப்படல் வேண்டும் என்பது பொருண்மை எண்ணக்கருவாகும்.
6. ஐயக்கடன் ஏற்பாடு எண்ணக்கரு புறக்கணிக்கப்படின் அது அலகுசர் எண்ணக்கருவை மீறுவதாகும்.
7. கண்கீட்டுக் கொள்கைகளை எச்சந்தர்ப்பத்திலும் மீறமுடியாது என்பது மாறாநிலமை எண்ணக்கருவாகும்.

**4) பின்வருவனவற்றிற்கு சரியான விடையின் கீழ் கோடிடுக.**

1. நட்டம் ஏற்படும் என கருதினால் ஏற்பாடு செய்யப்படவேண்டும் என வலியுறுத்தும் எண்ணக்கரு.

*அட்டுறு எண்ணக்கரு * பண அளவீட்டு எண்ணக்கரு * பாதுகாப்பு எண்ணக்கரு * இணைத்தல் எண்ணக்கரு

2. நிலையான சொத்துக்களை அவற்றின் கிரயப்பெறுமதியில் காட்டப்படவேண்டும் என வலியுறுத்தும் எண்ணக்கரு எது.

* கிரய எண்ணக்கரு * கால எண்ணக்கரு * அலகுசார் எண்ணக்கரு * இணைத்தல் எண்ணக்கரு

3) ஆண்டுகாலத்தில் கொள்வனவு செய்யப்பட்ட பொருளின் ஒருபகுதியைகிரயமாகவம் மிகுதியை இருப்பாகவும் காட்டும் எண்ணக்கரு

* நோக்க எண்ணக்கரு * தொடர்ந்செல் எண்ணக்கரு * வெளிப்படுத்தல் எண்ணக்கரு * இணைத்தல் எண்ணக்கரு.

4) சொத்துக்களை நிலையானசெத்து நடைமுறைச்சொத்து என்ற வகுதிக்குள் வகைப்படுத்தும் எண்ணக்கரு.

* அலகுசார் எண்ணக்கரு * தொடர்ந்துசெல் எண்ணக்கரு * வெளிப்படுத்தல் எண்ணக்கரு * மாறாநிலை எண்ணக்கரு.

5) நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டை அடிப்படையில் தயாரிக்கப்படவேண்டும் எனவலியுறுத்தம் எண்ணக்கரு.

* நாணயஉறுதித் தன்மை எண்ணக்கரு * தொடர்ந்துசெல் எண்ணக்கரு * இணைத்தல் எண்ணக்கரு * கால எண்ணக்கரு.

6) இருப்புகளின் குறைந்த பெறுமதியை கணக்கேடுகளில் காட்டப்படவேண்டும் என வலியுறுத்தும் எண்ணக்கரு

* கூர்ந்தமதி எண்ணக்கரு * கால எண்ணக்கரு * அலகுசார் எண்ணக்கரு * இணைத்தல் எண்ணக்கரு

7) நிதிக்கூற்றுக்களுக்கு குறிப்புக்களை வலியுறுத்தும் எண்ணக்கரு.

* கிரய எண்ணக்கரு * வெளிப்படுத்தல் எண்ணக்கரு * அலகுசார் எண்ணக்கரு * இணைத்தல் எண்ணக்கரு

5) **பின்வரும் நிகழ்வுகள் பாமினி நிறுவனத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் இக்கொடுக்கல் வாங்கல்களுக்கு அடிப்படையாக அமையும் கணக்கீட்டு எண்ணக்கருவை குறிப்பிடுக.**

1) பங்காளர் பற்றுக்களுக்கு தனியான கண்குககள் பேனப்படுகின்றன.
2) கடன்பட்டோர், கடன்கொடுநர் சொத்தாகவும் பொறுப்பாகவும் காட்டப்படுகின்றது
3) வருடாவரும் கணக்கீடு தொடர்பாக ஒரே கொள்கையே பின்பற்றப்படுகின்றது.
4) நிலையான சொத்துக்கள் பெறுமானத்தேய்வுக்கு உட்படுத்தப்படுகின்றது
5) இருப்புக்களின் குறைந்த பெறுமதி இருப்பாக காட்டப்படுகின்றது
6) நிதியாண்டு முடிவில் கணக்கறிக்கைகள் தயாரிக்கப்படுகின்றது.
7) நிலையான சொத்துக்கள் கொள்வனவுப் பறுமதியிலேயே சொத்தாக காட்டப்படுகின்றது

6) **பின்வரும் நிகழ்வுகள் பாமினி நிறுவனத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் இக்கொடுக்கல் வாங்கல்கள் எக் கணக்கீட்டு எண்ணக்கருவை மீறுகின்றது என்பதை குறிப்பிடுக.**

1) ஊழியப்படை ஐந்தொகையில் சொத்தாக காட்டப்பட்டது.
2) உடமையாளரின் சொந்த வாகனம் சொத்தாக காட்டப்பட்டது
3) மோட்டார் வாகனம் இலாபநட்டக் கணக்கில் செலவாக பதியப்பட்டது
4) இருப்புக்கள் கூடிய சந்தைப் பெறுமதியில் இருப்பாக காட்டப்பட்டது
5) பெறுமாத் தேய்விடல் முறை கொள்கை குறிப்பாக காட்டப்படவில்லை
6) செயற்பாட்டு கால நிறைவுக்கு ஏற்ப கணக்குகள் தயாரிக்கப்படுகின்றது
7) விற்பனை இன்றேல் திரும்பல் விறபனையாக பதியப்பட்டது

7) **பின்வருவனவற்றிறகு சரியான விடையின் கீழ் கோடிடுக.**

1) நிகழ்வுகள் இடம் பெறும் போதே இலாபம் உழகைக்கப்படும் என கரும் எண்ணக்கரு

*அட்டுறு எண்ணக்கரு * பண அளவீட்டு எண்ணக்கரு * தேறல் எண்ணக்கரு * இணைத்தல் எண்ணக்கரு

2) பணத்தின் காலப்பெறுமதிகளை கவனத்தில் கொள்ளத்தேவையில்லை என கருதும் எண்ணக்கரு

* பணஅளவீட்டு எண்ணக்கரு * கால எண்ணக்கரு * அலகுசார் எண்ணக்கரு * இணைத்தல் எண்ணக்கரு

3) நிலுவை அடிப்படையில் வருமாணங்கள் செலவினங்களை கணிக்கும் எண்ணக்கரு

* அட்டுறு எண்ணக்கரு * முன்னெச்சரிக்கை எண்ணக்கரு * வெளிப்படுத்தல் எண்ணக்கரு * இணைத்தல் எண்ணக்கரு.

4) தாழ்ந்த பெறுமாணம் கொண்ட பொருட்களை கையிருப்பாக காட்டாது செலவாக காட்டப்பட வேண்டும் என கருதும் எண்ணக்கரு

* அலகுசார் எண்ணக்கரு * கூர்ந்தமதி எண்ணக்கரு * பொருண்மை எண்ணக்கரு * மாறாநிலை எண்ணக்கரு.

5) நிறுவன உடமையாளரை நிறுவனத்திலிருந்து வேறாக்கும் எண்ணக்கரு.

* அலகுசார் எண்ணக்கரு * தொடர்ந்துசெல் எண்ணக்கரு * இணைத்தல் எண்ணக்கரு

* கால எண்ணக்கரு.

6) ஐந்தொகைக்கு பின்னரான நிகழ்ச்சியை கணக்கேடுகளில் காட்டப்படவேண்டும் என வலியுறுத்தும் எண்ணக்கரு

* கூர்ந்தமதி எண்ணக்கரு * கால எண்ணக்கரு * அலகுசார் எண்ணக்கரு * வெளிப்படுத்தல் எண்ணக்கரு

7) கடன்பட்டோர் கழிவு ஏற்பாட்டை மேற்கொள்ளவேண்டும் என வலியுறுத்தும் எண்ணக்கரு

* கூர்ந்தமதி எண்ணக்கரு * வெளிப்படுத்தல் எண்ணக்கரு * அலகுசார் எண்ணக்கரு * இணைத்தல் எண்ணக்கரு

**8) பின்வரும் கூற்றுக்கள் சரியா பிழையா என கூறுக பிழையாயின் சரியான நடைமுறையை எண்ணக்கருவுடன் தருக. ?**

1) செலுத்தப்பட்ட வாடகை மாத்திரம் செலவாக பதிவு செய்யப்பட்டது
2) பெறப்பட்ட குத்தகை ஆதணம் சொத்தாக கருதி பதிவிடப்பட்டது
3) பலவருடங்களுக்குரிய எழுது கருவிகள் குறித்த செலவாக கருதி பதி செய்யப்பட்டது
4) 2005 ஆம் ஆண்டு ரூபா 200000 வாங்கப்பட்ட பொறி 2010 ம் ஆண்டில் 300000 பெறுமதியில் ஏடுகளில் பதிவடப்பட்டது.
5) விற்கப்படாத பொருளை இருப்பாக கருதி பதிவிடப்பட்டது.
6) பொறிக்கான சிறு ஆணி பொறிக்கணக்கிற்கு வரவிடப்பட்டது.
7) மோட்டார்கொள்வனவு பண்டக்கொள்வனவாக பதிவடப்பட்டது.

**மேலதிக பயிற்சி**

Q1) சொத்தக்களை நடைமுயல்லாச் சொத்து, நடைமுறைச் சொத்து என்ற வகைப்படுத்தலுக்கு உட்படுத்தும் எண்ணக்கரு எது? (… ….)

1) **பணஅளவீட்டு எண்ணக்கரு**
2) **கால எண்ணக்கரு**
3) **பொருண்மை எண்ணக்கரு**
4) **தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு**
5) **அலகுசார் எண்ணக்கரு**

Q2) ஆண்டு காலத்தில் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார்வான் பண்டக்கொள்வனவாக பதியப்படின் மீறப்பட்ட கணக்கீட்டு எண்ணக்கரு எது? (……)

1) **வரலாற்றுக்கிரய எண்ணக்கரு**
2) **கால எண்ணக்கரு**
3) **பொருத்தம் செய் எண்ணக்கரு**
4) **மாறா நிலமை எண்ணக்கரு**
5) **இரட்டைவிளைவு எண்ணக்கரு**

Q3) வருமானங்கள் உழைக்கும் போதே இனம்காணப்படும் மாறாக காசாக பெறப்படும்போது அல்ல என வலியுறுத்தும் எண்ணக்கரு எது?

(… ….)

1) **தேறல் எண்ணக்கரு**
2) **கால எண்ணக்கரு**
3) **பாதுகாப்பு எண்ணக்கரு**
4) **தொடந்து செல்லும் எண்ணக்கரு**
5) **கிரய எண்ணக்கரு**

Q4) தாழ்ந்த பெறுமானம்கொண்ட எழுதுகருவிகள் இருப்பில் உள்ளடக்கவில்லை. இது எவ் எண்ணக்கருவுக்கு அமைவானது. (… ….)

1) **இணைத்தல் எண்ணக்கரு**
2) **கால எண்ணக்கரு**
3) **பொருண்மை எண்ணக்கரு**
4) **அட்டுறு எண்ணக்கரு**
5) **பாதுகாப்பு எண்ணக்கரு**

Q5) இருப்புக்களின் கிரயம் குறைவாக காணப்பட்டபோதும் அதன் சந்தை விலையில் இருப்பு மதிப்பிடப்படின் மீறப்பட்ட எண்ணக்கரு எது? (… ….)

1) கூர்ந்த மதி எண்ணக்கரு
2) அலகுசார் எண்ணக்கரு
3) பொருண்மை எண்ணக்கரு
4) அட்டுறு எண்ணக்கரு
5) பண அளவீட்டு எண்ணக்கரு

Q6) சுரங்கத்தொழில் முயற்சியில் ஈடுபடும் ஒருவர் அம் முயற்சி நிறைவடையும் வரை அதன் பெறுபேற்றை மதிப்பிடவில்லை. இது எவ் எண்ணக்கருவை மீறுவதாகும் (… ….)

1) பாதுகாப்பு எண்ணக்கரு
2) அலகுசார் எண்ணக்கரு
3) வரலாற்றுக்கிரய எண்ணக்கரு
4) தொடந்து செல் எண்ணக்கரு
5) கால எண்ணக்கரு

Q7) குத்தகையின் கிழ் கொள்வனவு செய்யப்பட்ட சொத்து அதன் இறுதிக்கொடுப்பனவு செய்யமுன்னர் சொத்தாக காட்டப்பட்டது இது எவ் எண்ணக்கருவின் அடிப்படையிலாகும். (… ….)

1) பாதுகாப்பு எண்ணக்கரு
2) நோக்கமான எண்ணக்கரு
3) அமைப்பின் மேலான சாரம்
4) தொடந்து செல் எண்ணக்கரு
5) அலகுசார் எண்ணக்கரு

Q8) ஐந்தொகையில் கடன்பட்டோர் மீதியையும், கடன்கொடுநர் மீதியையும் முறையே சொத்தாகவும், பொறுப்பாகவும் இனம்கான அடிப்படையாக அமையும் கணக்கீட்டு எண்ணக்கரு எது? (… ….)

1) பணஅளவீட்டு எண்ணக்கரு
2) பொருண்மை எண்ணக்கரு
3) அட்டுறு எண்ணக்கரு
4) கால எண்ணக்கரு
5) செயற்படு அமைப்பு எண்ணக்கரு

Q9) நிறுவனம் தனது உறுப்பினரது தலையீடு இன்றி சுதந்திரமானமுறையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவதற்கு வகை செய்யும் கணக்கீட்டு எண்ணக்கரு எது? (… ….)

1) பாதுகாப்பு எண்ணக்கரு
2) தேறிய எண்ணக்கரு
3) பொருண்மை எண்ணக்கரு
4) மாறா நிலை எண்ணக்கரு
5) அலகுசார் எண்ணக்கரு

Q10) ஆண்டு காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 500000 விற்பனை தொடர்பில் வழங்கப்பட்ட உத்தரவாதம் சார்பாக 2% கணக்கேடுகளில் செலவினமாக ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என வலியுறுத்தம் கணக்கீட்டு எண்ணக்கரு எது? (… ….)

1) கிரய எண்ணக்கரு
2) கால எண்ணக்கரு
3) பொருத்தம் செய் எண்ணக்கரு
4) தேறல் எண்ணக்கரு
5) பாதுகாப்பு எண்ணக்கரு

Q11) பின்வரும் நடவடிக்கையும் கணக்கீட்டு எண்ணக்கருவும் தரப்பட்டுள்ளது இதனை ஒழுங்காக வெளிப்படுத்தும் சரியான தொடர் எது? (… ….)

**நடவடிக்கை**
1) இருப்பை குறைந்த பெறுமதியில் கணக்கேடுகளில் எடுத்தல்.
2) நடைமுறை,நடைமுறையல்லாச்சொத்து என வகைப்படுத்தல்
3) குத்தகை ஆதனத்தை சொத்தாக காட்டல்
4) கடன்பட்டோர் கடன்கொடுநரை ஐந்தொகையில் சொத்தாவும், பொறுப்பாகவும் காட்டல்.

5) நிதிக்கூற்றுக்கள் ரூபாக்களில் வெளிப்படத்தல்.

**எண்ணக்கரு**

A அமைப்பின் மேலான சாரம்

B பணஅளவீட்டுஎண்ணக்கரு

C கூர்ந்தமதி எண்ணக்கரு

D தொடந்நது செல்லல் எண்ணக்கரு

E அட்டுறு எண்ணக்கரு

1) CDEAB 2) CEDAB 3) CDAEB
4) CADEB 5) ACEDB

Q12) ஒரு வருடத்தில் கொள்வனவு செய்த சரக்குகளின் கிரயத்தின் ஒரு பகுதியை விற்றசரக்கின் கொள்விலையாகவும், மிகுதியை இருப்பாகவும் இனம் காண்பதற்கு அடிப்படையாக அமையும் எண்ணக்கரு எது? (……..)

1) **பாதுகாப்பு எண்ணக்கரு**
2) **இணைத்தல் எண்ணக்கரு**
3) **கைக்கிட்டிய எண்ணக்கரு**
4) **கிரய எண்ணக்கரு**
5) **அமைப்பின் மேலான சாரம்**

- 31.3.2016 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான தேவிபாலா நிறுவனத்தின் தேறியலாபம் ரூ 41800 ஆகும் இவர் பின்வரும் கணக்கீட்டு நடைமுறைதொடர்பில் சந்தேகங்களை வெளியிட்டுள்ளார்.

A) தனது மனைவியின் வைத்தியசாலைக்கு எடுக்கப்பட்ட ரூ 2000 பெறுமதியான பால்மா பெட்டிக்குரிய பதிவினை ஏடுகளில் மேற்கொள்ளவில்லை.

B) இருப்பின் கிரயப்பெறுமதியைவிட அவற்றின் சந்தைப்பெறுமதி
ரூ 2400 ஆல் குறைவாகவுள்ளபோதும் இருப்புக்கள் கிரயப்பெறுமதியிலேயே கணக்குகளுக்கு எடுக்கப்பட்டது.

C) 1.7.2015 இல் செய்யப்பட்ட 5000 மோட்டார் பழுதுபர்த்தல் செலவு மோட்டார்வாகனக்கணக்கிற்கு வரவிடப்பட்டது மோட்டாருக்கு 10% தேய்விடப்படுகின்றது.

D) நிதியாண்டில் ரூ 500 க்கு கொள்வனவுசெய்யப்பட் எழுதுகருவி ஐந்தாண்டுகளுக்கு பதிவளிக்கப்படும் என்றஅடிப்படையில் இவ்வாண்டுக்குரியது இலாபநட்டக்கணக்கில் தாக்கல்செய்யப்பட்டது.

**13ம் 14ம் வினாக்களுக்கு விடைதருக.**

Q13) மேற்படி விடையங்கள் சீராக்கப்பட்டபின்னுள்ள தேறியலாபம் யாது? (……..)

1) ரூ 31500 2) ரூ 36500 3) ரூ 31375 4) ரூ 41375 5) ரூ 36375

Q14) ABCD சீராக்கங்களுக்கு அடிப்படையாக அமையும் கணக்கீட்டு எண்ணக்கருவின் சரியானதொடர் எது?

1) **பாதுகாப்புஎண்ணக்கரு, அலகுசார் எண்ணக்கரு, பொருன்மை எண்ணக்கரு, இணைத்தல் எண்ணக்கரு**
2) **அலகுசார் எண்ணக்கரு, பாதுகாப்புஎண்ணக்கரு, இணைத்தல் எண்ணக்கரு பொருன்மை எண்ணக்கரு,**
3) **பணஅளவீட்டுஎண்ணக்கரு, அலகுசார் எண்ணக்கரு, பொருன்மை எண்ணக்கரு, பாதுகாப்பு எண்ணக்கரு**
4) **அலகுசார் எண்ணக்கரு, கிரய எண்ணக்கரு, பாதுகாப்புஎண்ணக்கரு பொருன்மை எண்ணக்கரு,**
5) **அலகுசார்எண்ணக்கரு, கிரய எண்ணக்கரு பணஅளவீட்டு எண்ணக்கரு, பொருன்மை எண்ணக்கரு**

Q15) ரூபன் நிறுவனத்தின் நிதிகூற்றில் 31.3.2016 முடிவடைந்த காலப்பகுதி என தலைப்பிட்டதுடன், சொத்துப்பொறுப்பு நடைமுறை, நடைமுறையல்லாதது என வகைப்படுத்தப்பட்டு காட்டப்பட்டதுடன், செலவினங்கள் மூலதனச் செலவு, வருமானச் செலவு என வேறாக்கப்பட்டிருந்தன இக் கூற்றில் முறையே வெளிப்படுத்தப்படுத்தப்படும் எண்ணக்கருச் சேர்வைகள் எவை?

(……..)

1) **காலஎண்ணக்கரு, தொடந்துசெல் எண்ணக்கரு, பாதுகாப்பு எண்ணக்கரு**
2) **காலஎண்ணக்கரு, இணைத்தல் எண்ணக்கரு, தொடந்துசெல் எண்ணக்கரு**

**3) பாதுகாப்புஎண்ணக்கரு, இணைத்தல் எண்ணக்கரு, அட்டுறு எண்ணக்கரு**
**4) காலஎண்ணக்கரு, செயற்படு அமைப்பு எண்ணக்கரு, அட்டுறு எண்ணக்கரு**
**5) காலஎண்ணக்கரு, தொடர்ந்து செல்எண்ணக்கரு, இணைத்தல் எண்ணக்கரு**

Q16) நாதன் கம்பனி பின்பற்றிய எண்ணக்கரு முறையே தோற்றத்தை காட்டிலும் மேலான சாரம், தேறல் எண்ணக்கரு, பாதுகாப்பு எண்ணக்கரு இதனை முறையாக வெளிப்படுத்தம் கூற்றுக்கள் எவை? (……..)

1) **உரிமையாளர் பண்டங்களை பற்றியதுடன், குத்தகை ஆதனத்தை சொத்தாக காட்டி சொத்துக்களுக்கு பெறுமாத்தேய்வு செய்தார்.**
2) **இருப்புக்களின் குறைந்த பெறுமதியில் இருப்பாக எடுத்து, சொத்துக்கு பெறுமானத்தேய்வு செய்து விற்பனை செய்க இன்றேல் திரும்பல் சீராக்கப்படல்,**
3) **குத்தகை ஆதனத்தை சொத்தாக பதிவு செய்து, பெறுமானத்தேய்வு இட்டு பற்றுக்களை பதிவு செய்தல்,**
4) **குத்தகை ஆதனத்தை சொத்தாக பதிவு செய்து, கடன் விற்பனை முழுவதையும் வருமானமா காட்டியதுடன், இருப்புக்களை குறைந்த பெறுமதியில் எடுத்துள்ளார்.**
5) **இருப்புக்களின் குறைந்த பெறுமதியில் இருப்பாக எடுத்து, விற்பனை செய்க இன்றேல் திரும்பல் சீராக்கப்பட்டு சொத்துக்கு பெறுமானத்தேய்வு செய்துள்ளார்.**

Q17) பின்வரும் நடவடிக்கையும் கணக்கீட்டு எண்ணக்கருவும் தரப்பட்டுள்ளது இதனை ஒழுங்காக வெளிப்படுத்தும் சரியான தொடர் எது? (……….)

**நடவடிக்கை**

1) நிகழத்தக்கபொறுப்பை ஏற்பாடாக பதிதல்
2) நடைமுறையல்லாச் சொத்துக்குரிய தேய்வை செலவாக இனம்காணல்
3) குத்தகை ஆதனத்தை சொத்தாக காட்டல்
4) வருமதி வருமானங்களையும் முற்பன செலவுகளை சீராக்கல்
5) நிதியறிக்கையில் நிறுவனபெயரை தலைப்பிடல்

**எண்ணக்கரு**

A சட்டமுரன்
B பொருத்தஞ்செய் எண்ணக்கரு
C கூர்ந்தமதி எண்ணக்கரு
D அலகுசார் எண்ணக்கரு
E அட்டுறு எண்ணக்கரு

1) ECADB 2) CBAED 3) BCAED
4) CADEB 5) ACEDB

Q 18) கணக்கீட்டு சட்டகத்தின் காணப்படும் அடிப்படை கருதுகோள்களை உள்ளடக்கிய தொகுதி எது? (……….)

A) பொருண்மை
B) அட்டுறு
C) வரலாற்றுகிரய
D) கால எண்ணக்கரு
E) தொடர்நது இயங்கும் எண்ணக்கரு

1) A யும் E யும் 2) B யும் E யும் 3) Bயும் C யும் 4) A யும் D யும் 5) E மாத்திரம்

Q19) எண்ணெய் அகல்வு முயற்சியில் ஈடுபடும் ஒருவர் அது நிறைவடையும் வரை நிறுவன பெறுபேற்றை மதிப்பிடாது நிறுத்திவைத்துள்ளார் எனின் மீறப்பட்ட எண்ணக்கரு எது? (……….)

1) **பாதுகாப்பு எண்ணக்கரு**
2) **அலகுசார் எண்ணக்கரு**
3) **வரலாற்றுக்கிரய எண்ணக்கரு**
4) **தொடந்து செல் எண்ணக்கரு**
5) **கால எண்ணக்கரு**

Q20) நட்டம் ஏற்படும் என கருதினால் ஏற்பாடு செய்யப்படவேண்டும் என வலியுறுத்தும் எண்ணக்கரு எது?

1) அட்டுறு எண்ணக்கரு
2) பண அளவீட்டு எண்ணக்கரு
3) பாதுகாப்பு எண்ணக்கரு
4) இணைத்தல் எண்ணக்கரு
5) அளவுசார் எண்ணக்கரு

Q21) நிலையான சொத்துக்களை அவற்றின் கிரயப்பெறுமதியில் காட்டப்படவேண்டும் என வலியுறுத்தும் எண்ணக்கரு எது?

1) கிரய எண்ணக்கரு
2) கால எண்ணக்கரு
3) அலகுசார் எண்ணக்கரு
4) இணைத்தல் எண்ணக்கரு
5) பணஅளவீட்டு எண்ணக்கரு

Q22) நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டை அடிப்படையில் தயாரிக்கப்படவேண்டும் எனவலியுறுத்தம் எண்ணக்கரு எது?

1) நாணயஉறுதித் தன்மை எண்ணக்கரு
2) தொடர்ந்துசெல் எண்ணக்கரு
3) இணைத்தல் எண்ணக்கரு
4) கால எண்ணக்கரு.
5) பாதுகாப்பு எண்ணக்கரு

Q23) நிதிக்கூற்றுக்களுக்கு குறிப்புக்களை வலியுறுத்தும் எண்ணக்கரு எது ? (……..)

1) கிரய எண்ணக்கரு
2) வெளிப்படுத்தல் எண்ணக்கரு
3) அலகுசார் எண்ணக்கரு
4) இணைத்தல் எண்ணக்கரு
5) கால எண்ணக்கரு

Q24) நிகழ்வுகள் இடம் பெறும் போதே இலாபம் உழைக்கப்படும் என கருதும் எண்ணக்கரு எது? (……)

1) அட்டுறு எண்ணக்கரு
2) பண அளவீட்டு எண்ணக்கரு
3) தேறல் எண்ணக்கரு
4) இணைத்தல் எண்ணக்கரு
5) கால எண்ணக்கரு

Q25) பணத்தின் காலப்பெறுமதிகளை கவனத்தில் கொள்ளத்தேவையில்லை என கருதும் எண்ணக்கரு எது? (……)

1) பணஅளவீட்டு எண்ணக்கரு
2) கால எண்ணக்கரு
3) அலகுசார் எண்ணக்கரு
4) இணைத்தல் எண்ணக்கரு
5) வரலாற்றக்கிய எண்ணக்கரு

Q26) நிலுவை அடிப்படையில் வருமாணங்கள் செலவினங்களை கணிக்கும் எண்ணக்கரு எது?
(……)

1) அட்டுறு எண்ணக்கரு
2) முன்னெச்சரிக்கை எண்ணக்கரு
3) வெளிப்படுத்தல் எண்ணக்கரு
4) இணைத்தல் எண்ணக்கரு.
5) அலகுசார் எண்ணக்கரு

Q27) தாழ்ந்த பெறுமாணம் கொண்ட பொருட்களை கையிருப்பாக காட்டாது செலவாக காட்டப்பட வேண்டும் என கருதும் எண்ணக்கரு எது? (…….)

1) அலகுசார் எண்ணக்கரு
2) கூர்ந்தமதி எண்ணக்கரு
3) பொருண்மை எண்ணக்கரு

**4) மாறாநிலை எண்ணக்கரு.**
**5) இணைத்தல் எண்ணக்கரு**

Q28) நிறுவன உடமையாளரை நிறுவனத்திலிருந்து வேறாக்கும் எண்ணக்கரு எது? (…….)

1) **அலகுசார் எண்ணக்கரு**
**2) தொடர்ந்துசெல் எண்ணக்கரு**
**3) இணைத்தல் எண்ணக்கரு**
**4) கால எண்ணக்கரு.**
**5) கூர்ந்தமதி எண்ணக்கரு**

Q29) ஐந்தொகைக்கு பின்னரான நிகழ்ச்சியை கணக்கேடுகளில் காட்டப்படவேண்டும் என வலியுறுத்தும் எண்ணக்கரு எது? (…….)

1) **பாதகாப்பு எண்ணக்கரு**
**2) கால எண்ணக்கரு**
**3) அலகுசார் எண்ணக்கரு**
**4) வெளிப்படுத்தல் எண்ணக்கரு**
**5) வரலாற்றுகிரய எண்ணக்கரு**

Q30) நிதிக்கூற்றுக்கள் ரூபாக்களில் வெளிப்படுத்தப்பட்டது இது எவ் எண்ணக்கருவின் அடிப்படையிலாகும். (…….)

1) **கூர்ந்தமதி எண்ணக்கரு**
**2) வெளிப்படுத்தல் எண்ணக்கரு**
**3) அலகுசார் எண்ணக்கரு**
**4) இணைத்தல் எண்ணக்கரு**
**5) பணஅளவீட்டு எண்ணக்கரு**

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

Q31) இறுதி இருப்புக்கள் விற்கத்தயாரான பொருளின் கிரயத்தில் கழித்தக்காட்டப்படுவதற்கு அடிப்படையை வழங்கும் எண்ணக்கரு எது?

…………………………………………………………..

Q32) விற்பனைமீதான உத்தரவாதச் செலவினத்திற்கு ஏற்பாட்டை மேற்கொள்வதற்கு அடிப்படையை வழங்கும் பொருத்தமான எண்ணக்கரு மூன்று தருக?

…………………………………………………………

…………………………………………………………

Q33) கணக்கீட்டுத் தகவல்களின் பொருத்தப்பாட்டுத் தன்மை என்ற பண்பை மீறுவதாக அமையும் கணக்கீட்டு எண்ணக்கரு எது?

……………………………………………………………

Q34) "இலாபங்களை எதிர்பாராதே நட்டங்களை எதிர்பார் " என்ற வாசகத்திற்கு அமைவான எண்ணக்கரு எது?

……………………………………………………………

Q35) நிதிக்கூற்றுக்களிற்கான விளக்க குறிப்புக்களை வலியுறுத்தும் கணக்கீட்டு எண்ணக்கரு எது?

…………………………………………………………..

Q36) கொடுக்கல்வாங்கல்களின் பெறுமதிகளின் தொகைக்கேற்ப கணக்கீட்டு பதிவில் மாற்றத்தை ஏற்படுத்தும் எண்ணக்கரு எது?

……………………………………………………………

Q37) பொதுவிலைமட்ட மாற்றங்களை கவனத்திற்கொள்ளாது கொடுக்கல் வாங்கல்களிற்கான கணக்குப்பதிவுகளை மேற்கொள்வதற்கு வகைசெய்யும் எண்ணக்கரு எது?

…………………………………………………………

Q38) கணக்கீட்டில் ஒப்பீட்டுத்தன்மைக்காக ஒரே முறை ஓரே கொள்கையினை பின்பற்றவேண்டும் என வலியுறுத்தும் எண்ணக்கரு எது?

………………………………………………………………

Q39) ஊழியரின் செயற்திறனை மதிப்பீடு செய்து அவற்றை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு தடையாக அமையும் எண்ணக்கரு எது?

………………………………………………………..

Q40) விற்பனை செய்க அன்றேல் திருப்புக என்ற அடிப்படையில் அனுப்பப்பட்ட பொருட்கள் முழுவதும் விற்பனையாக பதியப்பட்டது எனினும் இதில் ½ பொருட்கள் மாத்திரமே விற்கப்பட்டன இது எவ் எண்ணக்கருவை மீறுவதாகும்.

………………………………………………………..

Q41) க.பொ.த உயர்தர பரீட்சைக்கு தோற்றிய கீர்த்தி என்பவன் தனது பரீட்சை முடிவுகள் வெளியாகும்வரை சிறு வணிகம் ஒன்றை ஆரம்பித்து நடத்த எண்ணுகின்றான் இவனது எண்ணம் எவ் எண்ணக்கருவை மீறுவதாக அமைகின்னறது.

……………………………………………………………….

Q42) பின்வரும் கூற்றுக்கள் சரியா பிழையா என கூறுக?

A நிதிக்கூற்றுக்கள் செயற்பாட்டுக் காலப்பகுதிக்கேற்ப தயாரிக்கவேண்டும் என்பது கால எண்ணக்கருவாகும் (……………..)

B – கடன்விற்பனைகள் இடம்பெறும்போதே அவை இலாபத்தை உழைத்துக்கொள்ளுகின்றன என்பது தேறல் எண்ணக்கருவாகும்.

C- பங்காளர் மூலதனம் ஓர் அகப்பொறுப்பாக காட்டுவது அலகுசார் எண்ணக்கருவின்அடிப்படையிலாகும். (……………..)

D இருப்பு மதிப்பீட்டு முறைகள் நிதிநிலைமைக்கூற்றின் கீழ் குறிப்பாக காட்டப்படவேண்டும் என்பது கொள்கை மாறாமை எண்ணக்கருவின் அடிப்படையிலாகும் (……………….)

Q43) பின்வரும் கூற்றுக்களுக்கு பொருத்தமான எண்ணக்கருவை கீழ்வரும் புள்ளிக்கோட்டில் எழுதுக.

A - மூலதனச் செலவு நிதிநிலைமைக்கூற்றிலும் வருமானச்செலவு வருமானக்கூற்றிலும் வெளிபடுத்தப்படுகின்றன.

B – வருமதி முற்பன வருமானங்கள் நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்படுகின்றது.

C - கணக்கீட்டுச்சமன்பாட்டில் உரிமையாண்மை தனிக்கூறாக கருதப்படுகின்றது.

D இருப்புக்களின் கிரயத்தைவிட அவற்றின் கைத்தேறத்தக்கபெறுமதி குறைவாக காணப்படின் குறைந்த பெறுமதிக்கு இருப்புக்களை குறைத்தெழுதப்படுகின்றன.

| விடயம் | எண்ணக்கரு |
|---|---|
| A | ………………………………… |
| B | ………………………………… |
| C | ………………………………… |
| D | ………………………………… |

Q44) வயைறுத்த காவியா பொதுக்கம்பனி ………………… A

31.3.2016 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான முற்றுமடங்கிய வருமானக்கூற்று …………………………………………….. B

ரூ 000 …………………………………………… C

கடன்விற்பனை xxx ……………………….. D

விற்பனைக் கிரயம்  xxx

பெறுமானத்தேய்வு  xxx  ................................... E

கணக்கீட்டு எண்ணக்கரு

A - …………………………………………………..

B - ………………………………………………….

C - ………………………………………………….

D- ………………………………………………….

E - ………………………………………………..

Q45) வயைறுத்த காவியா பொதுக்கம்பனி ..................... A

31.3.2016 இல் உள்ளபடியான நிதிநிலைமைக்கூற்று

ரூ 000 ................................................. B

நடைமுறையல்லாச் சொத்து

கட்டிடம் (கிரயம்)  xxx  ………. …………………….. C

நடைமுறைச்சொத்து

கடன்பட்டோர்  xxx  ………………………………. D

உரிமையாண்மை

மூலதனம்  xxx  ………………………………... E

நடைமுறையல்லாப்பொறுப்பு  xxx ……………………….. F

கணக்கீட்டு எண்ணக்கரு

A - …………………………………………………..

B - ………………………………………………….

C - ………………………………………………….

D- ………………………………………………….

E - ………………………………………………..

F - ………………………………………………..

**கடந்த காலப் பரீட்சை வினாக்கள்**

**2019 1993**

## 2019 AUGUST

1. பின்வரும் கணக்கீட்டு எண்ணக்கருக்களில் எது கிரயம், தேறிய தேறக்கூடிய பெறுமதி ஆகியவற்றில் குறைந்த பெறுமதியில் நிதிக்கூற்றுக்களில் இருப்புக்களை இனம் காண்பதற்கான அடிப்படையை வழங்குகின்றது.
    1. முக்கியத்துவம், இணைத்தல் எண்ணக்கரு
    2. இணைத்தல், காலந்தவறாமை எண்ணக்கரு
    3. முன்னெச்சரிக்கை, தேறல் எண்ணக்கரு
    4. முன்னெச்சரிக்கை, வரலாற்றுக்கிய எண்ணக்கரு
    5. முன்னெச்சரிக்கை, இணைத்தல் எண்ணக்கரு

2. நிறுவனமொன்றின் கணக்கீட்டு எண்ணக்கருக்ளை பிரயோகிப்பது தொடர்பில் சரியான கூற்றை தெரிவு செய்க.

1. சாதாரண பங்குதாரர்களுக்கு வழங்கிய பங்குலாபங்களை நிறுத்திவைத்தலாபத்திலிருந்து கழிப்பதற்கான அடிப்படையை அலகுசார் எண்ணக்கரு வழங்குகின்றது.
2. வருமதி வருமானங்களை நடைமுறைச்சொத்தாக வகைப்படுத்துவதற்கான அடிப்படையை முக்கியத்துவ எண்ணக்கரு வழங்குகின்றது.
3. கடன்கொடுநரிடமிருந்து பெற்ற கழிவை வருமானமாக இனம்கான்பதற்கான அடிப்படையை இணைத்தல் எண்ணக்கரு வழங்குகின்றது.
4. கடன்படுநருக்கு கொடுத்தத கழிவை செலவொன்றாக இனம்கான்பதற்கான அடிப்படையை தேறல் எண்ணக்கரு வழங்குகின்றுத.
5. நிகழத்தக்க பொறுப்புக்கள் நிதிநிலைமைக்கூற்றில் பொறுப்பொன்றாக இனம்காண்பதற்கான அடிப்படையை முன்னெச்சரிக்கை வழங்குகின்றது.

3. பினவரும் கணக்கீட்டு நடவடிக்கைகளுக்கு மிகவும் பொருத்தமான கணக்கீட்டு எண்ணக்கருவை குறிப்பிடுக.

நடவடிக்கை — எண்ணக்கரு

A விற்பனை செய்யப்பட்ட பொருளுக்கான ஏற்பாட்டை செய்தல். ......................................
B குத்தகைக்கு எடுத்த கட்டிடத்தை குத்தகைக்கு எடுத்தவரின் ஏட்டில் சொத்தாக பதிதல். .......................................
C இலாபநட்டக் கணக்கில் பெறுமானத்தேய்வை செலவாக பதிதல். .................................
D நிதிநிலைமைக்கூற்றில் சொத்தை நடைமுறை, நடைமுறையல்லாச் சோத்தாக பதிதல். ...............................

## 2018 AUGUST

நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும்போது கணக்கீட்டு எண்ணக்கருவை பிரயோகிப்பது தொடர்பில் பின்வரும் எக்கூற்று சரியானது/ சரியானவை

A - அலகுசார் எண்ணக்கரு நிதிக்கூற்றுக்களில் உரிமையாண்மையை தனிக்கூறாக இனம்காண்கின்றது
B - தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு சொத்து மற்றும் பொறுப்களை நிதிக்கூற்றுக்களில் நடைமுறை மற்றும் நடைமுறையல்லாதது என வகைப்படுத்துகின்றது.
C – வருமானக்கூற்றில் பெறுமானத்தேய்வை இனம்காண்பதானது இணைத்தல் எண்ணக்கருவின் அடிப்படையிலாகும்.
...............................................................................................

புின்வரும் கொடுக்கல் வாங்கல் இளங்கோ உணவு வணிகத்தில் இடம்பெற்றது

15.1.2018 உணவு விநியோககட்டளை ஒன்றை பெற்றுக்கொண்டதுடன் ரூ 100000 முற்பனமாக காசு பெறப்பட்டது.
5.2.2018 மேற்படி கட்டளைக்கான உணவுகளை விநியோகத்ததுடன் காசாக ரூ 200000 பெறப்பட்டது.
5.2.2018 இல் இக்கட்டளைக்கான மீதபபணம் ரூ 50000 பெறப்பட்டது.
மேற்படி கட்டளை தொடர்பாக இனம்கானுதல் தொடர்பாக
அ) வருமாகம் இனம்கானல் திகதி ......................................
ஆ) இத்திகதியில் இனம்கானவேண்டிய வருமானம். ...................................
இ) மிகவும் பொருத்தமான கணக்கீட்டு எண்ணக்கரு ..............................

## 2017 AUGUST

- பின்வரும் கணக்கீட்டு எண்ணக்கருக்களில் எது வியாபாரமொன்றின் நிதிக்கூற்றுக்களில் ஊழியர்களின் தேர்ச்சியினை இனம்கானத்தேவையில்லை என்பதற்கான அடிப்படையை வழங்குகின்றது.
  ..........................................................................................................
- பின்வரும் கணக்கீட்டு எண்ணக்கருக்களில் எது வியாபாரமொன்றின் நிதிக்கூற்றுக்களில் கடன்பட்டோர் கடன்கொடுநர் இனம்கான்பதற்கான அடிப்படையை வழங்குகின்றது.
  ......................................................................................................
- கீழ்வரும் ஒவ்வொரு சூழ்நிலைக்கும் பிரயோகிக்ககூடிய மிகவும் பொருத்தமான கணக்கரு எது?
  1. அலகுசார் 2. முன்னெச்சரிக்கை 3. தொடர்ந்து செல்லல் 4. கணக்கீட்டு காலம்

சூழ்நிலை கணக்கீட்டு எண்ணக்கரு

A- நிதிக்கூற்றுக்கள் அறிக்கையிடும் காலத்தை குறிப்பிடல் ……………………………….

B- நிறுத்திவைத்த இலாபத்திலிருந்து உரிமையாளருக்கு செய்யப்பட்ட பகிர்வை கழித்தல் ……………………………….

D – பெற்றுக்கொள்ளப்பட்ட கிரயத்தில் ஆதனம்பொறி உபகரணத்தை அளவீடு செய்தல். ………………………………..

E- இருப்புக்களை அவற்றின் கிரயம் தேறக்கூடிய பெறுமதி என்பவற்றுள் குறைவானதில் அறவீடுசெய்தல் ……………………………….

- பின்வரும் ஒவ்வொரு சந்தர்பத்திலும் பேனப்படவேண்டிய கணக்கீட்டின் பண்புசார் குணாதிசயம் எது என குறிப்பிடுக.

A – நியாய பெறுமதியில் ஆதனம்பொறி உபகரணத்தை மதிப்பிடல் ……………………………….

B- கைத்தொழில் நெறிமுறைகளுக்கேற்ப முதல் உள் முதல் வெளியே முறைக்கமைய இருப்பு மதிப்பிடல் ………………………………..

C- நிதிக் குத்தகையின் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனத்தை சொத்தாக இனம்கானல் ………………………………….

D- ஊவ்வொரு காலாண்டு முடிவடைந்தும் ஒரு வாரத்தில் இடைக்கால நிதிக்கூற்றை வழங்கல் ………………………………….

## 2016 AUGUST

- எவ் எண்ணக்கரு சொத்துக்களை நடைமுறை நடைமுறையல்லாச்சொத்துக்களை வகைப்படுத்துவதற்கு அடிப்படையை வழங்குகின்றது

……………………………………………………………………………………………………

- எவ் எண்ணக்கரு இருப்புக்களை கிரயம் தேறக்கூடிய பெறுமதியில் குறைந்த பெறுமதியில் இனம் கான அடிப்படையை வழங்குகின்றது.
  ………………………………………………………………………………………………..
- பொருத்தமான எண்ணக்கருவை எழுதுக
  யு காணியின் பெறுமதி கூடுதலாக இருந்தபோதும் அதனை பெற்றுக்கொண்டவிலையில் அறிக்கையிடல் ……………………………………………….
- இயந்திரத்தை பயன்படுத்த எதிர்பார்த்த காலத்திற்கு தேய்விடல் …………………………….
- ரூ 5000 குறைவாக உள்ள எல்லாச்சொத்துக்களையும் செலவாக இனம்கானல் ………………..
- சரக்கிருப்புமதிப்பிட முதல் உள் முதல் வெளியே முறையை தொடர்ச்சியாக பயன்படுத்தல்.
  ………………………………..

## August 2015

- வருமானக்கூற்றில்ஒவ்வொரு காலத்திற்குமான பெறுமானத்தேய்வை இனம்காணும் எண்ணக்கர எது?

1. அட்டுறு 2. தொடாந்து இயங்குதல்
3. இணைத்தல் 4. தேறல் 5. முன்னெச்சரிக்கை

- வாடிக்கையாளருக்கு பொருட்களை விநியோகிக்கம் நேரத்தில் அதனை விற்பனை வருவாயாக வருமானக்கூற்றில் இனம் காண்பதற்கான அடிப்படையை வழங்கம் கணக்கீட்டு எண்ணக்கரு எது?

1. அட்டுறு 2. இணைத்தல்
3. கணக்கீட்டு காலம் 4. முன்னெச்சரிக்கை 5. தேறல்

- வரையறுத்த அகமது பொதுக்கம்பனியின் முற்றுமடங்கிய வருமானக்கூற்றில் A,B,C,D குறிக்கப்பட்டுள்ளன அவை குறிக்கும் எண்ணக்கருவை குறிப்பிடுக

வயைறுத்த அகது பொதக்கம்பனி ..................................... A

31.3.2015 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான முற்றுமடங்கிய வருமானக்கூற்று …………………………………………….. B

ரூ 000 .................................................... C

விற்பனை வருமானம் XXX } ……………………….. D
விற்பனைக் கிரயம் XXX

கணகீட்டு எண்ணக்கரு

A - ……………………………………………………..
B - ……………………………………………………..
C - ……………………………………………………..
D- ……………………………………………………….

## August 2014 New

- நிதிக்கூற்றக்களில் கடன்பட்டோர், கடன்கொடுநரை இனம்காண்பதற்கான அடிப்படையை வழங்கம் எண்ணக்கரு எது;

1. அட்டுறு 2. தொழில்முழுமைக்கூற்று
3. கணக்கீட்டு காலம் 4. இணைத்தல் 5. தேறல்

- சொத்துக்கள் பொறுப்புக்கள் என்பவற்றை நடைமுறை , நடைமுறையல்லா வகைப்படுத்தலுக்கான அடிப்படையை வழங்கம் எண்ணக்கரு எது?

1. ஆட்டுறு 2. முாறாத்தன்மை
3. தோடர்ந்த இயங்குதல் 4. கணக்கீட்டு காலம்
5. தேறல்

- கீழ்வரும் ஒவ்வொரு சந்தர்பத்திலும் பொருத்தமான கணக்கிட் எண்ணக்கருவை குறிப்பிடுக.

A வருட இறுதியில் உள்ள மூலப்பொருட்களை கிரயம் தேறிய பெறுமதியில் குறைவான பெறுமதியில் மதிப்பிடல்
………………………………………

B ஒவ்வொரு கணக்கீட்டு காலத்திற்கும் உற்பத்திக் கணக்கை தயாரித்தல். ………………………………………

C பொருள்களை உற்பத்தி செய்ய முன்னர் வாடிக்கையாளரிடமிரந்து பெற்ற முற்பனத்தை பொறுப்பொன்றாக இனம்காணல்.
………………………………………

D உற்பத்திக் கணக்கில் இயந்திர பெறுமானத்தேய்வினை உற்பத்தி மேந்தலையாக இனம்காணல்.
………………………………………

## August 2013 New

- எது கணக்கீட்டுச் சமனபாட்டில் உரிமையை தனித்தகூறாக அனம்கான வேண்டிநிற்கின்றது.

…………………………………………………………………………………………..

- எது அல்லது எவை நிதிக்கூற்றுக்களில் உத்தரவாதத்திற்கான ஏற்பாட’டை மேற்கொள்வதுடன் தொடர்புடையது

A அட்டுறு B இணைத்தல்
C முன்னெச்சரிக்கை

1) B மாத்திரம் 2) AB மாத்திரம் 3) AC மாத்திரம் 4) BC மாத்திரம் 5) ABC மாத்திரம்

- ஆடைத்தொழிற்சாலை தொடர்பில் ஒவ்வொரு சூழ்நிலைக்கும் தொடர்புபடும் மிக பொருத்தமான எண்ணக்கரு.

A – துணிஇருப்பு நடைமுறைச் சொத்தாகவும் தையல் இயந்திரம் நடைமுறையல்லாச் சொத்தாகவும் வகைப்படத்தல்.

B – குறித்த வருடத்தில் செலுத்திய தொழிற்சாலை வாடகைளின் ஒரு பகுதியை முற்பனக்கொடுப்பனவாக இனம் கானுைதல்.

C- வருட இறுதியிலுள்ள துணி இருப்பு கிரயத்திலும் தேறக்கூடிய பெறுமதியிலும் குறைவான தொகையில் இனம்கானுல்.

D – ஆடைகளை விற்பனை செய்யும்போது விற்பனை வருமானத்தை இனம் காணுதல்.

| விடயம் | எண்ணன்கரு |
|---|---|
| A | ………………… |

B ......................
C ......................
D ......................

## August 2012 New

- நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் மற்றும்சமர்ப்பித்தல் சட்டத்திற்கமைய நிதிக்கூற்றுக்களின் இரண்டு அடிப்படை எடுகோள்கள் எவை?

1) அலகுசார் அட்டுறு
2) அலகுசார், தொடர்ந்து செல்லல்
3) அலகுசார் கால அளவீடு
4) அட்டுறு, தொடர்ந்து இயங்கல்
5) காலஅளவீடு பணஅளவீடு

- விற்பனைக்கிரயத்தை ஒரு செலவினமாகவும் வருடமுடிவில் உள்ள சரக்கை சொத்தாகவும் மிகச்சிறப்பாக இனம்கான பயன்படும் எண்ணக்கரு எது?

1) தொடர்ந்து செல்லல்
2) வரலாற்று கிரயம்
3) இணைத்தல்
4) முன்னெச்சரிக்கை
5) தேறல்

- நிறுவனமொன்றின் பினவரும் சூழ்நிலையில் உடன்பட்டுள்ள பண்புசார் சிறப்பியல்வு.

சூழ்நிலை
அ) நிறுவனம் ஒவ்வொரு வருடமும் நேர்கோட்டுமுறையில் தேய்விடல். ……………………………..
ஆ) நிதிக்குத்தகையின் கிழ் பெறப்பட்ட உபகரணம் சொத்தாக புதிதல். ……………………………

- கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தொடர்புபடும் மிக பொருத்தமான எண்ணக்கரு.

A – வருமானம் உழைக்கப்படும்போதே அது வருமானக்கூற்றில் இனம் காணப்படும்
B – நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும்போது கம்பனியின் வாழ்க்கை காலம் 12 மாதங்கலாக பிரிக்கப்படும்.
C- கம்பனியின நிதிக்கூற்றுக்களில் பணவீக்க சீராக்கம் செய்யப்படுவதில்லை.
D – ஏற்படக்கூடிய சாத்தியமான உத்தரவாத கோரிக்கை தொடர்பில் ஏற்பாடு ஒன்று செய்யப்படல்.

| விடயம் | எண்ணன்கரு |
|---|---|
| A | ................ |
| B | ................ |
| C | ................. |
| D | ................. |

## 2011 AUGUST

1) வரையறுத்த சேரன் தனியார் கம்பனியின் வருமானக்கூற்று கீழே தரப்பட்டுள்ளது A B C D ஆகிய எழுத்துக்களால் குறிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடத்திலும் பிரயோகிக்கப்பட்ட கணக்கீட்டு எண்ணக்கருவை குறிப்பிடுக.

வரையறுத்த சேரன் தனியார் கம்பனி (A)

31.3.2011 இல் முடிவடைந்த வருடத்திற்கான வருமானக்கூற்று (B)

| | ரூ 000 |
|---|---|
| விற்பனை | 1000 (C) |
| விற்பனைக்கிரயம் | 600 |
| மொத்தலாபம் | 400 |
| செலவுகள் | (150) (D) |
| தேறியலாபம் | 250 |

எழுத்து கணக்கீட்டு எண்ணக்கரு

A ……………………………………..

B ………………………………………

C ………………………………………

D ……………………………………….

2) அட்டவனையில் தரப்பட்டுள்ள ஒவ்வொரு நிலைமையும் சிறந்த முறையில் விபரிக்கும் கணக்கீட்டு குறிப்பிடும் எழுத்தை குறிப்பிடுக.

A ஒப்பீட்டுதன்மை

B தோற்றத்தை காட்டிலும்கருத்து முக்கியத்துவம்

C முன்னெச்சரிக்கை

D – பொருத்தப்பாடு

1) சொத்தொன்றை அதன் சந்தை விலையில் இனம்கானல் ……..

2) நிதிக்குத்தகையில் பெறப்பட்ட சொத்தை அதனுடன் தொடர்புடைய பொறுப்புக்களுடன் இனம் கானல் ...

3) நிதிக்கூற்றில் முன்னைய வருடதொகையை வெளிப்படுத்தல் ……

4) கடன்பட்டோர் தொகையில் சேகரிக்கும் இயலுமையை மதிப்பீடு செய்யத பின்னர் சீராக்கல் ……….

## 2010 AUGUST

1) வியாபார உரிமையாளர் தனது சொந்த வதிவிடத்தை திருத்துவதற்கு வங்கிடமிருந்து பெற்றுக்கொண்ட கடன்தொகையை வியாபார நிலையத்தின் பொறுப்பில் உள்ளடக்கியுள்ளதால் நிறுவனத்தால் மீறப்பட்ட கணக்கீட்டு எண்ணக்கரு எது?

2) ஐந்தொகையில் நடைமுறை, நடைமுறையற்ற என்ற வகையில் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வகைப்படுத்துவதற்கு அடிப்படையாக அமையும் எண்ணக்கரு?

## 2009 AUGUST

1) 2006 ம் ஆண்டில் ரூ 15000000 வாங்கப்பட்ட காணியொன்று 2009 மார்ச்31 இல் ஐந்தொகையில் மீள்மதிப்பிட்ட ரூ 30 000000 என பதியப்பட்டது இச்சந்தர்ப்பத்தில் எவ் எண்ணக்கரு பின்பற்றப்படவில்லை?

2) வரையறுத்த அமரா கம்பனியின் ஐந்தொகையில் ஐயக்கடனிற்கான ஏற்பாடாக ரூபா 150000 உள்ளடக்கப்பட்டிருந்தது இதற்கு எவ் எண்ணக்கரு அடிப்படையாக அமைகின்றது.

3) 31மார்ச் 2009 இல் அமரசேன சகோரர்களின் ஐந்தொகையில் கடன்பட்டோர், கடன்கொடுநர் மீதி முறையே ரூபா 500000, ரூபா 200000 தொகையை காட்டியது கடன்பட்டோரையும், கடன்கொடுநரையும் இனம் காண்பதற்கு எவ் எண்ணக்கரு அடிப்படையாக அமைகின்றது.

4) நிறுவனமொன்றின் கொடுக்கல் வாங்கல்களையும், நிகழ்வுகளையும் எனைய தரப்பினரது சுகந்திரத்தை பேனும் வகையில் பதிவிடுவதற்கு அனுமதிக்கும் கணக்கீட்டு எண்ணக்கரு?

## 2008 AUGUST

1. வியாபார நிறுவனமொன்று கணக்குப் புத்தகங்களில் கூடியளவு உண்மையான பெறுமதிகளை பேனும்பொருட்டு இதன் சொத்துக்களை அதன் நடைமுறைச் சந்தைப்பெறுமதியில் பெறுமதியிட பிரேரனை செய்தது இது எந்தக்கணக்கீட்டு எண்ணக்கருவை மீறுகின்றது.
2. நிமால் மண் அகழ்வு வியாபாரமொன்றை 2000 ம் ஆண்டு ஆரம்பித்து வியாபாரத்தின் நிதிப்பெறுபேற்றை நிர்ணயிப்பதற்கு இவர் அகழ்வு முடியும் வரை காத்துக்கொண்டிருக்கின்றார். இது எக்கணக்கீட்டுக் கொள்கையை மீறுகின்றது.

## 2007 AUGUST

**அ)**

1. நடைமுறையல்லாச் சொத்துக்கள் பெறுமானத்தேய்விடுவதற்கு அடிப்படையாக அமைந்த எண்ணக்கரு.
2. ஒரு வருடத்தில் கொள்வனவு செய்த சரக்குகளின் கிரயத்தின் ஒரு பகுதியை விற்றசரக்கின் கொள்விலையாகவும், மிகுதியை இருப்பாகவும் இனம் காண்பதற்கு அடிப்படையாக அமையும் எண்ணக்கரு.
3. கிரயம் தேறிய தேறக்கூடிய பெறுமானத்தில் குறைந்த பெறுமானத்தின் மீது இருப்பை கணிப்பதற்கு அடிப்படையாக அமையும் எண்ணக்கரு.

ஆ) பின்வரும் கூற்றுக்கள் சரியா அல்லது பிழையா என குறிப்பிடுக

1) ஐயக்கடனுக்காக செய்யப்பட்ட ஏற்பாடானது இணைத்தல் எண்ணக்கருவுடன் ஒத்துச் செல்கின்றது
2) ஒரு வியாபார நிறுவனத்தால் கணக்கீட்டுக் கொள்கை ஒன்று பின்பற்றப்பட்டால் அதை தொடந்து வரும் காலங்களில்மாற்ற முடியாது.

## 2006 AUGUST

1. உதிரிப்பாகங்களை ஒருவருடத்திற்கு மேலாக பாவனை செய்யக்கூடியதாகவிருந்தும் இவைகள் கொள்வனவு செய்யப்பட்ட வருடத்திலேயே இதன் கிரயத்தை இலாபநட்டக் கணக்கில் முழுமையாக பதிவளிக்கப்பட்டுள்ளது இதற்கான கணக்கீட்டை பின்பற்றும் எண்ணக்கரு எது.
2. இருப்புக் கிரயத்தை மதிப்பிடுவதற்கு பயன்படும் இருப்புக்கிரயம், தேறிய தேறக்கூடிய பெறுமதியில் எது குறைவோ அதனை பயன்படுத்தல் முன்னெச்சரிக்கை எண்ணக்கருவுடன் ஒத்தீரக்கின்றன.

***2006 August***

நாதன் வியாபாரத்தில் 31*/12/2005* இல் முடிவடைந் வருடத்திற்கான தகவல்கள் வருமாறு.

1) ரூபா 40000 பெறுமதியான பொருட்கள் காசுக்கு வாங்கப்பட்டு ரூபா 60000 கடனுக்கு விற்கப்பட்டது.
2) வருட முடிவில் உள்ள கடன்பட்டோர் ரூபா 180000 இருந்து ரூபா 5000 அறவிடமுடியாக்கடனாக பதியப்பட்டு மிகுதியில் 10% ஐயக்கடன் ஏற்பாடு செய்யப்பட்டது.
3) *1/7/2005* இல் வான் ரூபா 500000 வாங்கப்பட்டது இவ்வாகனம் வங்கிக்கடன் மூலம் வாங்கப்பட்டது. இவ்வாகனத்திற்கு 10% தேய்விடப்படுகின்றது.
4) நாதனின் தனிப்பட்ட பாவனைக்காக வியாபாரப் பணத்தை பயன்படுத்தி ரூபா 40000 கணினியொன்று *1/10/2005* இல் வாங்கப்பட்டது.
5) 2006 இன் முதல் காலாண்டுக்காக விளம்பர முகவருக்கு ரூபா 17500 முற்பணம் 2005 டிசம்பரில் செலுத்தப்பட்டது.

வேண்டப்படுவது.

1) கீழ் உள்ள கணக்கிட்டுச் சமன்பாட்டு மாதிரியில் பதிக.
2) ஓவ்வொரு கொடுக்கல் வாங்கல்களும் எந்த எண்ணக்கரு அடிப்படையில் பதியப்பட்டது என கூறுக.

| கொடுக்கல் வாங்கல் இல | சொத்து | | மூலதனம் | பொறுப்பு | | எண்ணக்கரு |
|---|---|---|---|---|---|---|
| | நடைமுறையல்லா | நடைமுறை | | நடைமுறையல்லா | நடைமுறை | |
| | | | | | | |

## 2005 AUGUST

நிறுவனமொன்று கடைப்பிடிக்கும் இரண்டு கணக்கீட்டுப்பரிகாரங்கள் பிற்வருமாறு

1. விற்பனை செய்யப்படாத கொள்வனவுகள் சொத்தாக கருதப்பட்டது.
2. தேறிய ஆனால் உழைக்கப்படாத வருமானம் ஒரு பொறுப்பாக கருதப்பட்டது.
   நீா் மேற்படிகூற்றுக்களுடன் உடன்படுகின்றீரா என குறிப்பிட்டு எவ் எவ் எண்ணக்கரு பிரயோகிக்கப்பட்டுள்ளத என குறிப்பிடுக.

## 2004 AUGUST

கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்கள் கணக்கீட்டு வாதங்களை குறிப்பிடுகின்றன

1. முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒரு சிறிய தொகையுடன் சம்மந்தம்கொண்ட கொடுக்கல்வாங்கல்களை பதிவிடத்தேவையில்லை.
2. பணத்தின் அலகுப்பெறுமதியானது காலப்பகுதிக்கு நிலையானதாக காணப்படுவதில்லை.
3. கணக்கீட்டு நியமங்கள் நிதிக்கூற்றுக்களுக்கு மேலதிக குறிப்புக்களை வேண்டி நிற்கின்றன.
4. அலகுசாா் எண்ணக்கருவின்படி அட்டுறுவும் முற்பணமும் அவசியமானவை.
5. இரப்புப்பெறுமதியில் கிரயத்தில் தேறிய தேறக்கூடிய பெறுமதியில் குறைந்த பெறுமதியை பயன்படுத்த வேண்டும் என கணக்கீட்டு நியமம் வேண்டி நிற்கின்றது.

6. கூடுமானவரை வருமானத்தை விரைவாக அடையாளப்படுத்துதல் செலவுகளை தாமதமாக அடையாளப்படுத்துதல்.
7. காசு பெற்றுக்கொள்ளும்போது மட்டுமே வருமானத்தை அடையாளப்படுத்த வேண்டும்.
8. வரலாற்றுக் கிரயமானது ஐந்தொகையுடன் மட்டுமே தொடர்புபடுகின்றது.

அ) ஒவ்வொரு கூற்றும் சரியா பிழையா என குறிப்பிடுக
ஆ) ஒவ்வொருசந்தர்ப்பத்திலும் தொடர்பு படும் கணக்கீட்டு எண்ணக்கரு.

## 2003 AUGUST

கீழே கூறப்பட்டுள்ள நிலமைகள் ஒவ்வொன்று தொடர்பிலும் மீறப்பட்டுள்ள அல்லது பின்பற்றப்பட்டுள்ள கணக்கீட்டு எண்ணக்கருவை கூறுக.

1. தனியுரிமை வணிகமொன்றின் உரிமையாளரது சொந்த சொத்துக்கள் வணிகத்தின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்வில்லை.
2. இருப்பு பெறுமான மதிப்பீட்டிற்கு பயன்படுத்தப்படும் முறையானது நிதிக்கூற்றுக்கான குறிப்பொன்றாக காட்டப்படுகிறது.
3. விற்பனைப்பட்டியல் வாடிக்கையாளருக்கு சமர்ப்பிக்கும் வேளையில் விற்பனையானது வருமானமாக இனம்கானப்படுகிறது.
4. சொற்ப கிரயத்தை கொண்டிருக்கும் கருவியானது பல ஆண்டுகால பயன்பாடு ஆயுளை கொண்டிருப்பினும் கொள்வனவு செய்யப்படும் போது செலவாக தாக்கல் செய்யப்படுகின்றது.
5. ஐயக்கடனுக்கான ஏற்பாடு மதிப்பிடப்படவில்லை.
6. அடுத்த 5 ஆண்டுக்கு செலுத்தப்பட்ட கட்டிடவாடகை சொத்தா பதியப்பட்டுள்ளது.

## 2002 AUGUST

கணக்கீட்டு எண்ணக்கருக்கள் பற்றிய உமது அறிவின் அடிப்படையில் பின்வரும் அட்டவனையில் உள்ள வெற்றிடங்களுக்கு பொருத்தமான விடை தருக.

| ஏண்ணக்கரு | அடிப்படையான கருத்து | இவ் எண்ணக்கருவால் நிதிக்கூற்றில் தோன்றும் விளைவு |
|---|---|---|
| 1) கணக்கீட்டு அலகுசார் எண்ணக்கரு<br>2) இணைத்தல் எண்ணக்கரு<br>3) கால அளவு எண்ணக்கரு<br>4) செற்படு அமைப்பு எண்ணக்கரு<br>5) பண அளவீட்டு எண்ணக்கரு<br>6) வரலாற்றுக்கிரய எண்ணக்கரு | | |

## 2001 AUGUST

கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றுக்களும் ரவி நிறுவனத்தின் கணக்கியல் உதவியாளரின் அபிப்பிராயத்தை வெளிப்படுத்துகின்றது.

1. வியாபார உரிமையாளரான ரவி தனது சொந்தப்பாவனைக்காக ரூபா 50000 க்கு கணணி ஒன்றை வாங்கினார் இப் பணம் வியாபார வங்கிக் கணக்கினூடாக செலுத்தப்பட்டதால் இது அலுவலக கணக்கில் பதிவிடல் வேண்டும் என அபிப்பிராயப்பட்டார்
2. சரக்கிருப்பில் உள்ளடங்கியுள்ள 10000 பொருட்கள் வழக்கிழந்துபோனது. இதன் தேறிய தேறக்கூடிய பெறுமதி 25000 கணக்கியல் உதவியாளரது கருத்துப்படி விற்பனை செய்யப்படும்வரை எதுவித நட்டத்தையும் இனம்கான முடியாது என்பதாகும்.
3. கம்பனி 5 வருடத்திற்கு முன்பு 500000 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட நிலத்துண்டை இப்போது 750000 க்கு விற்பனை செய்யமுடியும். இது தொடர்பாக கணக்கியல் உதவியாளரது கருத்து இப்பெறுமதியில் ஏற்பட்ட அதிகரிப்பை கட்டாயமாக இலாபமாக காட்டப்படல் வேண்டும்.

வேண்ப்படுவது
ஆ) கணக்கு உதவியாளரது அபிப்பிராயம் அமுல்படுத்தப்படுமானால் இதனால் மீறப்படும் கணக்கியல் எண்ணக்கரு.
ஆ) சரியான கணக்கீட்டுப் பரிகாரத்தை குறிப்பிடுக.

## 2000 AUGUST

கதிர், டான்சி என்போரது பங்குடமையில் 31/12/99 இல் முடிவடைந்த வருடத்திற்கான கணக்கு தயாரிக்கப்படுகின்ற போது கணக்காளர் பல தெளிவற்ற நிலமைகளை எதிர்நோக்குகின்றார்

1. ஒவ்வொரு பங்காளருக்குமான சொந்த நட்டஈட்டுக்கட்டணம் 2500 ஐ பங்குடமை செலுத்தியது.
2. இன் நிறுவனம் நீண்டகாலம் தொடர்ந்து இயங்குவதில் அதி நிச்சயமற்ற நிலமையை கொண்டுள்ளது.
3. வாடிக்கையாளர் ஒவ்வொருவருக்கும் சில பொருட்கள் விற்பனை செய்யப்பட்டபோதும் 2000 ம் ஆண்டு ஜனவரி மாதமுடிவிலே இதற்கான பணத்தை பெற்றுக்கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.
4. வாடிக்கையாளர்களில் ஒருவர் முறிவடையும் நிலையில் உள்ளார் இவ்வாடிக்கையாளர் 50000 கடன் பெற்றுள்ளார்.
5. வாடிக்கையாளரிடமிருந்து அதிகளவு கட்டளையை தரக்கூடிய பெரிய கட்டளையை பெற்றிருந்த போதும் இவ்விற்பனை உண்மையில் இன்னும் இடம்பெறவில்லை.
6. இப்பங்குடமையில் இவ்வருடத்தில் நட்டத்தை பெற்றிருந்தது எவ்வாறாயினும் இருப்புமதிப்பீட்டில் பயன்படுத்திய FIFO முறைக்கு பதிலாக LIFO முறையை பயன்படுத்தியிருப்பின் இலாபத்தை பெற்றிருக்க முடியும் என பங்காளர்கள் நம்பினர்.

வேண்டப்படுவது.

அ) மேலே உள்ள நிலமைகளை பதிவிடுவதற்கான கணக்கீட்டு எண்ணக்கருவை குறிப்பிட்டு சரியான கணக்கீட்டு ஒழுங்குமுறையை தருக.

## 1999 AUGUST

சேனகா நிறுவனத்தின் புதிதாக சேர்ந்துகொள்ளப்பட்ட கணக்கு எழுதுவினைஞர் பின்வரும் தீர்மானங்களை எடுக்கவுள்ளார் அதனுடன் நீர் உடன்படுகிறீரா? இல்லையா என குறிப்பிட்டு மீறப்படும் எண்ணக்கருவை குறிப்பிட்டு சரியான கணக்கீட்டு பரிகாரத்தை குறிப்பிடுக.

1. இவ்வாண்டு நிலையானசொத்து பெறுமதி அதிகரித்துள்ளதால் நிலையானசொத்துக்கு பெறுமானத்தேய்வு பதியத்தேவையில்லை.
2. கம்பனி பல வருடங்களாக எளிய சராசரி முறையை பயன்படுத்துகின்றது இதற்குப் பதிலாக FIFO முறைக்கு மாற்றப்பட்டுள்ளது.
3. 3 சிறிய கோவைகளின் கிரயங்கள் அவைகளின் பயன்ரு காலம் நான்கு வருடங்களாகவிருந்த போதும் அவைகள் கொள்வனவு செய்யப்படும் போது செலவாக இடப்பட்டிருந்தன.
4. நிறுவன உரிமையாளரின் தனிப்பட்ட வைத்தியசாலை செலவு இலாபநட்டக்கணக்கில் பதியப்பட்டுள்ளது.
5. நிலம் அதன் மதிப்பிடப்பட்ட விற்பனை விலையில் மதிப்பிட்டுள்ளது. இதன் விலை அதன் கிரயத்தைவிட கூடியது இவ்அதிகரிப்பு இலாபநட்டக்கணக்கில் உள்ளடக்கப்பட்டள்ளது.
6. வியாபாரத்திற்கு எதிராக முக்கிய வழக்கு ஒன்று போடப்பட்டுள்ளது. நிறுவனம் தோல்வியடைவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம் உள்ளது. இதற்கான ஏற்பாடுகள் எதுவும் செய்யப்படவில்லை.

## 1998 AUGUST

பின்வரும் ஒவ்வொரு கூற்றுக்களும் சில கணக்கீட்டு வழிகாட்டிகள், நடைமுறைகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன

1) கணக்கீட்டுப் பதிவேடுகளில் விலைமட்ட மாற்றங்கள் இனம் காணப்படுவதில்லை
2) இருப்பினை மதிப்பிட கிரயத்தில் குறைந்தது அல்லது தேறிய தேறக்கூடிய பெறுமதி பாவிக்கப்படும்
3) ஐந்தொகைக்கு பிந்திய எல்லா முக்கிய நிகழ்வுகளும் வெளிப்படுத்தப்படும்
4) ஐயக்கடன் ஏற்பாடு ஏற்படுத்தப்பட்டது
5) திருத்தற் கருவிகளை கொள்வனவு செய்யும் போது செலவாக கருதப்படுகின்றது
6) குறிக்கப்பட்ட காலப் பகுதிக்குரிய வருமானங்களை உழைப்பதற்கு அக்காலப்பகுதிக்குரிய செலவுகள் பங்களித்தால் மட்டும் இனம் காணப்படும்.

மேற்படி கூற்றுக்களை மிகவும் பொருத்தமான முறையில் விளக்கும் கணக்கீட்டு எண்ணக்கரு


# MR. V.S.Thirukumaran
# Vayavilan central College
# Vayavilan- Jaffna

Tp No 0776158080
Viber No 0779109623
Whatsapp No 0776158080
Email kumaranthirus3gmail.com